**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 250/2017**

திரு.லோகநாதன் (P.W –1) **22.4.2025**

<u>மனு அனுமதிக்கப்பட்டு வாதி மீண்டும் அழைக்கப்பட்டு தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தற்போது தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–20 முதல் 24 ஆவணங்கள் தாவா வழக்குரையில் வாதூரைக்கப்படவில்லை. முதலில் சாட்சியம் அளித்த போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தற்போது தான் கிடைத்தது அதை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ–20 ன்படி 31.5.2017 ம் தேதி பரிவர்த்தனைகள் Blom knit Finisher நிறுவனத்திலிருந்து எனக்கு வந்த தொகை என்றால் தவறு. அந்தத் தொகையை நான் DRD க்கு வரைவோலை மூலமாக வங்கியில் கொடுத்திருந்தேன். அந்தத் தொகை எனக்கு எப்படி வந்தது என்கிற விவரத்தை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரி. சொத்து ஏலத்திற்கு வந்த போது செட்டில்மெட்டிற்கு கேட்டார்கள் கடன் வாங்கி கொடுத்தேன். கடன் வாங்கியதற்கான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. அம்மாதிரி கடன் எதுவும் பரவில்லை தற்சமயம் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. உண்மையிலேயே கடன் பெற்று இருந்தால் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ–20 ல் **31.5.2016** ம் தேதி **delete hold** என்று சொல்லப்பட்டுள்ளது அதன் விவரம் என்ன என்றால் சொத்தை விற்று

வரைவோலை கொடுத்தார்கள். அந்த தொகையை வங்கியில் தாக்கல் செய்த போது பிடித்துக் கொண்டார்கள். அதன் பிறகு நான் கடிதம் கொடுத்ததால் **delete hold** என்று வந்துள்ளது. மீண்டும் பணத்தை பிடித்து விட்டார்கள். விற்ற சொத்தின் விவரங்களை தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே விற்பனை செய்திருந்தால் அந்த ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 31.5.2016 தேதியில் ஐந்து லட்சம் ரூபாய் கணக்கிலிருந்து என் காசோலை மூலமாக எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ–20 ல் 31.5.2016 ம் தேதியில் ரூ.11,85,000/– 3 வது நிறுவனத்தில் இருந்து தான் வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. இந்தத் தொகை எந்த வங்கிக்கு மாறுதல் ஏற்பட்டது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கோவை நஞ்சப்பா நகர், ரெக்கவரி கிளைக்கு மாற்றம் அடைந்துள்ளது.

3. அந்த வங்கியில் இந்த வழக்கில் சம்மன் மூலம் விசாரணை செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. அந்த வங்கியின் சம்மன் மூலம் விசாரணை செய்தால் 31.5.2016 ஆம் தேதி ஏற்பட்ட வங்கி பரிமாற்ற விவரங்கள் தெரியவரும் என்றால் சரி. அந்த வங்கி பரிமாற்றம் நான் அனுமதித்தன் பெயரில் ஏற்பட்டதா வங்கியே தனிச்சையாக பணத்தை மாற்றிக் கொண்டார்களா என்றால் தன்னிச்சையாக வங்கி அதிகாரிகள் பிடித்துக் கொண்டார்கள் மீதித் தொகையை நான் செலுத்தினேன். OTS transfer க்கு முன்பே பிடித்துக் கொண்டார்களா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ–20 முதல் 23 ஆவணங்கள் 13.9.2017 ம் தேதிக்கு பிறகு ஏற்பட்டவை என்றால் சரி. பி.வா.சா.ஆ–21 முதல் 24 ஆவணங்களில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் முத்திரை மற்றும் மேலாளர் கையொப்பம் உள்ளதா என்றால் கையொப்பம் உள்ளது, முத்திரை இல்லை, அது பிரிண்டர் லெட்டர். உண்மையான

ஆவணமாக இருந்திருந்தால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வின் முத்திரை பதிக்கப்பட்டு இருக்கும் என்றால் தவறு.

4. பி.வா.சா.ஆ–21 முதல் 24 ஆவணங்களும் வெவ்வேறு தேதியில் அனுப்பப்பட்டுள்ளது. எந்த ஆவணத்திலும் சீல் இல்லை என்றால் சரி. ஆகையால், அது ஆவணங்கள் சட்டப்படி செல்லாத ஆவணங்கள் என்றால் தவறு. பி.வா.சா.ஆ–20 வங்கி பாஸ் புத்தகத்தில் முழு விவரங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 1.6.2016 க்கு பின்னிட்டு பி.வா.சா.ஆ–20 ஐ 2019 வருடம் வரை உள்ள விவரங்கள் தாக்கல் செய்தால் தான் முழு பண பரிமாற்றங்கள் தெரியவரும் என்றால் சரியல்ல. வங்கியில் சம்மன் மூலம் விசாரணை செய்தால் முழு விவரங்கள் தெரியவரும் என்றால் ஆமாம். வங்கி அதிகாரிகள் மற்ற பாகதாரர்களின் வங்கிக் கணக்கில் உள்ள தனிப்பட்ட தொகைகளையும் ஒன்றாம் பிரதிவாதி நிறுவன கடனுக்காக பிடித்தம் செய்தார்களா என்றால் தெரியாது. பொய் சாட்சியம் அளிக்கிறேன் ஏலம் வந்த விவரங்களை மறைத்து பணத்தை நான் மற்ற பாகதார்களுக்கு தெரியாமல் வங்கியில் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. மற்ற பாகதார்களுக்கு ஒன்னாம் பிரதிவாதி நிறுவனத்தின் சொத்துக்கள் விற்பனையானதை பொறுத்து தெளிவுபடுத்தவில்லை சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.22 18:32:32 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.